## முக்கிய தொலைபேசி எண்கள்

| | |
|---|---|
| பெண்கள் மறுமலர்ச்சி நிலையம் (WCC) | 04-228 0342 |
| பெண்கள் சேவை நிலையம் (PPW) | 04-398 8340 |
| சட்ட உதவி மையம் | 04- 210 9100 |
| சட்ட ஆலோசனை மையம் | 04-261 7451 |

### அரச மலேசிய காவல் இலாக்கா

| | |
|---|---|
| • பினாங்கு(தலைமை காவல் நிலையம்) | 04-222 1522 |
| • ஜோர்ஜ் டவுன் (கிழக்கு) | 04-218 1822 |
| • பாலேக் பூலாவ்(மேற்கு) | 04-866 2222 |
| • செபராங் பிறை வடப்பகுதி | 04-576 2222 |
| • செபராங் பிறை மையப்பகுதி | 04-538 2222 |
| • செபராங் பிறை தெற்குப்பகுதி | 04-585 8222 |

### காவல் நிலையங்கள்

| | |
|---|---|
| • டத்தோ கிராமட் | 04-227 1422 |
| • பட்டாணி ரோடு | 04-218 1844 |
| • கம்போங் பாரு | 04-828 8522 |
| • பூலாவ் திக்குஷ் | 04-228 0422 |
| • ஆயர் ஈத்தாம் | 04-826 8522 |
| • பண்டார் பாரு | 04-828 4522 |
| • புக்கிட் பெண்டேரா | 04-829 9422 |
| • பத்து பிரிங்கி | 04-881 1434 |
| • தஞ்சோங் தோக்கோங் | 04-890 3444 |
| • சுங்கை நிபோங் | 04-643 0222 |
| • ஜெலுத்தோங் | 04-282 5922 |

### சமூக நல இலாக்காவின் அலுவலகங்கள்

| | |
|---|---|
| • கொம்தார் | 04-650 5258 |
| • ஜோர்ஜ் டவுன் | 04-226 4531 |
| • பாலேக் பூலாவ் | 04-866 8442 |
| • புக்கிட் மெர்தாஜாம் | 04-538 2584 |
| • பட்டர்வொர்த் | 04- 575 8715 |
| • ஜாவி / நிபோங் திபால் | 04-582 1798 |

### அரசாங்க மருத்துவமனைகள்

| | |
|---|---|
| • பினாங்கு | 04-222 5333 |
| • செபராங் ஜெயா | 04-382 7333 |
| • பாலேக் பூலாவ் | 04-866 9333 |
| • புக்கிட் மெர்தாஜாம் | 04- 549 7333 |
| • சுங்கை பாகாப் | 04-582 4333 |

## உங்களுக்காக செய்யும் உதவிகள்

உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஒரு பாதுகாப்பான இருப்பிடத்தை வழங்குகிறது

கவுன்சிலிங் மற்றும் சட்ட ஆலோசனை சேவைகளை வழங்குகிறது.

IPO பெற உதவி புரிகிறது

பெண்கள் மறுமலர்ச்சி நிலையத்தின் சேவைகள் யாவும் இலவசம். அனைத்து இரகசியங்களும் காக்கப்படும்


WCC
Women's Centre for Change

241, Jalan Burma, 10350 Penang.
Tel: 04-228 0342 / 011-3108 4001
04-398 8340 / 016-439 0698
E-mel: wcc@wccpenang.org
Laman Web: www.wccpenang.org


WCC
Women's Centre for Change
பெண்கள் மறுமலர்ச்சி நிலையம்

ஆதரவாளர்
MMK Women, Family and Community Development

# வீட்டு வன்முறை சட்டம்

# பாதுகாப்பு உங்கள் உரிமை

யாரும் கொடுமைப்படுத்தப் படக் கூடாது


பெண்கள் மறுமலர்ச்சி நிலையம் (WCC)
241, JalanBurma ,10350 Penang
Tel: 04-228 0342
011-3108 4001
E-mail: wcc@wccpenang.org
Website: www.wccpenang.org

**Pusat Perkhidmatan Wanita (PPW)**
13, Lorong Sutera 6, Taman Sutera,
13700 Seberang Jaya, Penang.
Te: 04-398 8340 / 016-439 0698
E-mail: ppw@wccpenag.org

## வீட்டு வன்முறை என்றால் என்ன?

உங்கள் குடும்பத்தில் ஒருவர் உங்களை கொடுமைப் படுத்தினால் அது தான் வீட்டு வன்முறை. அறைவது, எத்துவது, கழுத்தை நெரிப்பது, சுவற்றில் தலையை முட்டுவது, கட்டாயப்படுத்தி உடலுறவு கொள்வது, உங்களை காயப்படுத்துவதாக அச்சுறுத்துவது அல்லது உங்களை முட்டாள், உதவாக்கரை என்று அவமானப்படுத்துவதும் வீட்டு வன்முறைகளில அடங்கும்.

வீட்டு வன்முறை பரவலாக நடந்துவருகிறது. பொதுவாக ஆண்கள் பெண்களையும், பிள்ளைகளையும் கொடுமைப் படுத்துவார்கள். ஆனால் இது யாருக்கும் நடக்கலாம். வீட்டு வன்முறையை புரிபவர் கொடுமைப்படுத்தப்படுபவரை கட்டுப்படுத்த முயல்கிறார்.

**யாரும் கொடுமைப் படுத்தப்படக் கூடாது. வீட்டு வன்முறை ஒரு தவறு.**

## வீட்டு வன்முறை சட்டம் என்றால் என்ன?

வீட்டு வன்முறை சட்டம் 1994-ல் அங்கீகரிக்கப்பட்டது. இச்சட்டத்தின் வழி வீட்டு வன்முறை என்பது ஒரு ஆபத்தான சமூகப் பிரச்சனை என அடையாளம் காணப் பட்டுள்ளது. இது ஒரு தனிப்பட்ட குடும்பப் பிரச்சனை அல்ல.

வீட்டு வன்முறை சட்டம் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களை பாதுகாக்கின்றது. அதாவது கணவன், மனைவி (முன்னாள் கணவன் அல்லது மனைவி), குழந்தைகள் (தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் உட்பட), மனோரீதியாகவோ உடல்ரீதியாகவோ பாதிக்கப்பட்ட பெரியவர்கள் மற்றும் இதர குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் இச்சட்டம் பாதுகாக்கின்றது. இந்த வீட்டு வன்முறை சட்டம் முஸ்லீம்கள் உள்பட அனைவருக்கும் பொருந்தும்.

## எந்த விதமான வன்முறைகளிலிருந்து வீட்டு வன்முறைச் சட்டம் பாதுகாப்பளிக்கிறது?

வீட்டு வன்முறை பல விதங்களில் நடந்தாலும், உடலின் வெளிப்புறமாகவும், மனோவியல் ரீதியாகவும் ஏற்படுத்தப்படும் வன்முறையை சட்டத்தினால் அங்கீகரிக்கப்படுகின்றது, உதாரணமாக; உங்களை காயப்படுத்துவது, விருப்பத்துக்கும் மீறி கட்டுப்படுத்துவது அல்ல வற்புறுத்துவது என்பவை அடங்கும்.

## வீட்டு வன்முறை சட்டம் உங்களுக்கு எப்படி உதவ முடியும்?

வீட்டில் நடக்கும் வன்முறையைப் பற்றி நீங்கள் புகார் செய்யலாம். வீடு பாதுகாப்பாக இல்லை என நினைத்தால் நீங்களும் உங்கள் குழந்தைகளும் பெண்கள் மறுமலர்ச்சி நிலையம் அடைக்கலமாக தங்கலாம். வீட்டிலிருந்து உங்கள் பொருட்களை எடுக்க வேண்டுமென்றால் ஒரு சமூக நல அதிகாரியை அல்லது போலீஸ் அதிகாரியை நீங்கள் துணைக்கு அழைத்துச் செல்லலாம்.

நீங்கள் நீதிமன்றத்தின் உதவியை நாடலாம். மேலும் வன்முறைகளிலிருந்து உங்களை பாதுகாக்க நீதிமன்றம் ஒரு தற்காலிக பாதுகாப்பு கட்டளையை (Interim Protection Order - IPO) பிறப்பிக்கும். நீங்கள் ஒரு கொடுமைப்படுத்தப்பட்ட நபரை பார்த்துக் கொள்கிறீர்களானால் (உதாரணத்திற்கு ஒரு குழந்தை அல்லது உடல் ஊனமுற்றவர்) அவர்களுக்காக நீங்கள் IPO மனுசெய்யலாம். குற்றவாளி IPO-வை மீறினால் அவரை நீதிமன்றம் தண்டிக்க முடியும்.

## தற்காலிக பாதுகாப்பு கட்டளையை IPO பெறுவது எப்படி?

- **மருத்துவ உதவி**

நீங்கள் காயமடைந்திருந்தால் அருகில் உள்ள அரசாங்க மருத்துவமனைக்குச் சென்று அங்குள்ள ஆபத்து அவசர பகுதியில் சிகிச்சை பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் மருத்துவ பரிசோதனை அறிக்கையின் எண்ணை பெற்றுக்கொள்ளுங்கள்.

- **போலீஸ் உதவி**

எந்த போலீஸ் நிலையத்திலும் வீட்டு வன்முறையை புகார் செய்யலாம். உங்கள் புகாரின் எண்ணை பெற்றுக்கொள்ளுங்கள். முடிந்தால் புகாரின் நகலை அப்பொழுதே வாங்கிக்கொள்ளுங்கள்.

போலீஸ் அதிகாரி உங்களுடைய புகாரை புலனாய்வு அதிகாரியிடம் (I,O) ஒப்படைப்பார். போலீஸ் அதிகாரியின் ஆய்வுக்கு உதவும் வகையில், அடுத்து நீங்கள் சமூக நலத்துறை இலாக்காவுக்கு சென்று, அங்கு உங்கள் தற்காலிக பாதுகாப்பு கட்டளைக்கு (IPO) விண்ணப்பிக்கலாம்.

- **சமூக நல இலாகாவின் உதவி**

அல்லது சமூக நல இலாகாவிடம் சென்று உங்களுக்கு IPO தேவைப்படுவதாக கூறவும். போலீசாரிடம் புகார் செய்திருந்தால் அதை அவர்களிடம் காண்பிக்கவும். நீங்கள் IPO பெறுவதற்கு சமூக நல அதிகாரி உதவி புரிவார்.

- **நீதிமன்றம்**

ஒரு வக்கீலின் சேவையையும் நீங்கள் நாடலாம். வீட்டு வன்முறையைப் பற்றி நீதிமன்றம் உங்களிடம் விசாரிக்கலாம். உங்களுக்கு பாதுகாப்பு அவசியம் என நீதிமன்றம் கருதினால் உங்களுக்கு நீதிமன்றம் IPO வழங்கும்.

குற்றவாளியால் உங்களுக்கு மீண்டும் காயம் விளையக் கூடும் என நீங்கள் நினைத்தால் கைது செய்யும் கட்டளையையும் IPO வுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். இதன் வழி குற்றவாளி IPO-வை மீறினால் உடனே போலீசாரால் கைது செய்யப்படுவார்.

IPO எந்த விதத்தில் மீறப்பட்டாலும் உடனடியாக போலீசாரிடமும், சமூக நல அதிகாரியிடமும் புகார் செய்யவும். குற்றவாளி IPO-வை மீறியதற்காக தண்டிக்கப்படுவார்.

## அடுத்து என்ன நடக்கும்?

விசாரனை முடியும் வரைதான் IPO நீடிக்கும். விசாரனை முடிந்த பிறகு IPO காலாவதியாகிவிடும்.

குற்றவாளி குற்றம் சாட்டப்பட்டால் நீங்கள் ஒரு பாதுகாப்பு கட்டளைக்கு (Protection Order) (PO)விண்ணப்பிக்கலாம். IPO-வை விட PO-வின் மூலம் உங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு கிடைக்கும். காரணம் நீதிமன்றம் இதனுடன் மற்ற கட்டளைகளை இணைக்க முடியும். உதாரணத்திற்கு ஒரு PO உங்களுக்கு பின்வரும் உரிமைகளை அளிக்கிறது. குற்றவாளி இல்லாமல் நீங்கள் உங்கள் வீட்டில் வசிக்க, குற்றவாளி உங்கள் வீட்டை, வேலை செய்யும் இடத்தை அல்லது பள்ளியை நெருங்காமல் மற்றும் குற்றவாளி உங்களுடன் பேசாமல் அல்லது கடிதம் எழுதாமல் தடுக்க முடியும்.

நீதிமன்றத்தின் உத்தரவின் படி, வீட்டு வன்முறையின் போது நீங்கள் இழந்த பணத்தை நஷ்ட ஈடாய் பெற்றுக்கொள்ள முடியும். உங்களையோ அல்லது குற்றவாளியையோ கவுன்சிலிங்கிற்கு அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட முடியும்.